# நியாயமான நடைமுறை சட்ட விதிகள் மீதான கொள்கை

பதிப்பு 1.10

**முன்னுரை**

இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது வெளியிடும் வழிகாட்டுதல்களின் அடிப்படையில், நியாயமான நடைமுறைகள் குறித்த கொள்கை, இயக்குநர்கள் குழுவால் வடிவமைக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது. இந்த கொள்கையை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் நிறுவனத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டு பரப்பப்படும்.

***(I) கடன்களுக்கான விண்ணப்பங்கள் மற்றும் அவற்றின் செயலாக்கம்:***

(a) கடன் வாங்குபவருக்கு அனைத்து தகவல்தொடர்புகளும் உள்ளூர் மொழியில் அல்லது அவர் புரிந்துகொள்ளும் மொழியில் இருக்க வேண்டும்.

(b) கடன் விண்ணப்பப் படிவங்கள் கடன் வாங்குபவர்களை பாதிக்கக்கூடிய தேவையான தகவல்களை உள்ளடக்கியிருந்தால், மற்ற NBFCகள் வழங்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் அர்த்தமுள்ள ஒப்பீடு செய்யப்படலாம் மற்றும் கடன் வாங்கியவரால் அனைத்து தகவல்களையும் முதலிலேயே அறிந்து முடிவை எடுக்க முடியும். கடன் விண்ணப்பப் படிவத்தில், விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் எவை என குறிப்பிடபட்டிருக்கும்.

(c) நிறுவனம் அனைத்து கடன் விண்ணப்பங்களையும் பெற்றதற்கான ஒப்புகையை வழங்கும். கடன் விண்ணப்பத்தின்மீது எந்த காலக்கெடுவிற்குள் முடிவு செய்யப்பட வேண்டும் என்பதும் ஒப்புகையில் குறிப்பிடப்படும். நிறுவனம் கடன் விண்ணப்பங்களை நியாயமான காலத்திற்குள் சரிபார்க்கும். கூடுதல் விவரங்கள் / ஆவணங்கள் தேவைப்பட்டால், அதனை உடனடியாக வாடிக்கையாளர்களிடம் தெரிவிக்கும்.

***(II) கடன் மதிப்பீடு மற்றும் விதிமுறைகள் / நிபந்தனைகள்:***

(a) கடன் வாங்குபவர்களால் விண்ணப்பிக்கப்படும் கடன் விண்ணப்பத்தினை சரியாக மதிப்பீடு செய்வதை நிறுவனம் உறுதி செய்யும். நிறுவனத்தின் கடன் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப மதிப்பீடு இருக்கும்.

(b) நிறுவனம் கடன் வாங்கியவருக்குப் புரியும் உள்ளூர் மொழியில் கடன் ஒப்புதல் கடிதம், கடன் தொகை மற்றும் அதன் வருடாந்திர வட்டி விகிதம் மற்றும் விண்ணப்பிக்கும் முறை போன்றவற்றுடன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை எழுத்துப்பூர்வமாக தெரிவிப்பதுடன் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதை பதிவிலும் வைக்க வேண்டும். நிறுவனம் கடனை நிராகரித்தால் அதனையும் கடன் வாங்குபவருக்கு தெரிவிக்கும். கடன் ஒப்பந்தத்தில், தாமதமாகத் திருப்பிச் செலுத்துவதற்கு விதிக்கப்படும் அபராத வட்டியை நிறுவனம் தடித்த எழுத்தில் குறிப்பிட வேண்டும்.

(c) நிறுவனம் கடன் ஒப்பந்தத்தின் நகலை கடன் வாங்குபவர்களுக்கு கடன் ஒப்பந்தத்தில் மேற்கோள் காட்டப்பட்ட அனைத்து இணைப்புகளின் நகலுடன், உள்ளூர் மொழியில் அல்லது கடன் வாங்கியவர் புரிந்துகொள்ளும்

மொழியில் கடன்கள் ஒப்புதல் அளிக்கப்பட்ட நேரத்திலோ அல்லது கடன்கள் வழங்கும் நேரத்திலோ வழங்க வேண்டும்.

**(III) கடன் கணக்குகளில் அபராதக் கட்டணங்கள்**

ஆகஸ்ட் 18, 2023 தேதியிட்ட நியாயமான கடன் நடைமுறை - கடன் கணக்குகளில் அபராதக் கட்டணங்கள் குறித்த ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின்படி, நிறுவனம் ஜனவரி 01, 2024 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பின்வரும் வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

(a) கடன் வாங்குபவரால் கடன் ஒப்பந்தத்தின் பொருள் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்காததற்காக அபராதம் வசூலிக்கப்பட்டால், அது 'அபராதக் கட்டணங்களாக' கருதப்படும் மற்றும் முன்கூட்டியே வசூலிக்கப்படும் வட்டி விகிதத்தில் சேர்க்கப்படும் 'அபராத வட்டி' வடிவத்தில் வசூலிக்கப்படாது என்பதை நிறுவனம் உறுதி செய்யும்.
(b) அபராதக் கட்டணங்களின் மூலதனமாக்கல் இருக்காது என்பதை நிறுவனம் உறுதி செய்யும், அதாவது அத்தகைய கட்டணங்களுக்கு மேலும் வட்டி கணக்கிடப்படாது. இருப்பினும், இது கடன் கணக்கில் வட்டியை கூட்டுவதற்கான சாதாரண நடைமுறைகளை பாதிக்காது.
(c) ஒரு குறிப்பிட்ட கடன்/ தயாரிப்பு வகைக்குள் பாகுபாடு காட்டாமல், அபராதக் கட்டணங்களின் அளவு நியாயமானதாகவும், கடன் ஒப்பந்தத்தின் பொருள் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்காததாகவும் இருப்பதை நிறுவனம் உறுதி செய்யும்.
(d) 'தனிப்பட்ட கடன் வாங்குபவர்களுக்கு, வணிகத்தைத் தவிர வேறு நோக்கங்களுக்காக' அனுமதிக்கப்பட்ட கடன்களின் அபராதக் கட்டணங்கள், பொருள் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்காததற்காக தனிநபர் அல்லாத கடன் வாங்குபவர்களுக்கு பொருந்தக்கூடிய அபராதக் கட்டணங்களை விட அதிகமாக இருக்கக்கூடாது என்பதை நிறுவனம் உறுதி செய்யும்.
(e) கடனின் பொருள் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்காததற்கான நினைவூட்டல்கள் கடன் வாங்குபவர்களுக்கு அனுப்பப்படும் போதெல்லாம், பொருந்தக்கூடிய அபராதக் கட்டணங்களும் கடன் வாங்குபவர்களுக்குத் தெரிவிக்கப்படுவதை நிறுவனம் உறுதி செய்யும்.
(f) அபராதம் வசூலிக்கும் எந்தவொரு நிகழ்வும் அதற்கான காரணமும் கடன் வாங்குபவர்களுக்குத் தெரிவிக்கப்படுவதை நிறுவனம் உறுதி செய்யும்.
(g) நிறுவனம் தனது இணையதளத்தில் வட்டி விகிதங்கள் மற்றும் சேவைக் கட்டணங்களின் கீழ் வாடிக்கையாளரின் தகவலுக்கான அபராதக் கட்டணங்களின் அளவை வெளியிடும்.

***(IV) கடன்களை வழங்குதல் மற்றும் அதில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் உள்ள மாற்றங்கள்:***

(a) நிறுவனம் அத்தகைய கடன் ஒப்புதலுக்குண்டான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க அனுமதிக்கப்பட்ட கடன்களை சரியான நேரத்தில் வழங்குவதை உறுதி செய்யும். நிறுவனம் கடன் வாங்குபவருக்கு கடன் வழங்கல் அட்டவணை, வட்டி விகிதங்கள், சேவைக் கட்டணங்கள் மற்றும் முன்பணம் செலுத்துதல் போன்ற விதிமுறைகளில்

ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், கடன் வாங்கியவருக்குப் புரியும் வகையில் முன்கூட்டியே நிறுவனம் தெரிவிக்கும்.

(b) வட்டி விகிதங்கள் மற்றும் கட்டணங்களில் ஏற்படும் மாற்றங்கள் வருங்காலத்தில் நடைமுறைக்கு வருவதை நிறுவனம் உறுதி செய்யும். இது சம்பந்தமாக பொருத்தமான நிபந்தனைகள் கடன் ஒப்பந்தத்தில் இணைக்கப்பட வேண்டும்.

(c) திரும்ப பெறுதல் அல்லது பணம் செலுத்த துரிதப்படுத்துதல் அல்லது நிறைவேற்றுதல் போன்ற முடிவுகள் கடன் ஒப்பந்தத்துடன் இணக்கமாக இருக்க வேண்டும்.

(d) நிறுவனம் அனைத்து நிலுவைத் தொகைகளையும் திருப்பிச் செலுத்தும்போது அல்லது கடன் வாங்குபவருக்கு எதிராக நிறுவனம் வைத்திருக்கும் எந்தவொரு சட்டப்பூர்வ உரிமை அல்லது உரிமைக்கு உட்பட்ட கடனின் நிலுவைத் தொகையை முழுமையாக பெற்றுக்கொண்டபோது அனைத்து ஜாமீன் பத்திரங்களையும் நிறுவனம் திரும்ப கொடுத்துவிடும். கடன் வாங்கியவர் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பாக்கி தொகைகள் இருந்தாலோ அல்லது வேறு ஏதாவது வகையில் நிறுவனத்திடம் பாத்தியதை வைத்திருந்தாலும் அவற்றினை கணக்கு முடிக்கும் வரையிலோ அல்லது செலுத்தும் வரையிலோ அவரின் ஜாமீன் பாத்திரங்களை நிறுவனமே வைத்திருக்கும். என்பதை கடன் வாங்கியவரிடம் கடிதம் வழியாக நிறுவனம் தெரிவிக்கும்.

**(V) பொது:**

(a) கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் வழங்கப்பட்ட நோக்கங்களுக்காக தவிர, கடன் வாங்குபவரின் விவகாரங்களில் தலையிடுவதை நிறுவனம் தவிர்க்க வேண்டும் (கடன் வாங்கியவரால் முன்னரே தெரிவிக்கப்படாத எந்தவொரு புதிய தகவலும் நிறுவனத்தின் கவனத்திற்கு வரவில்லை என்றால்).

(b) கடன் பெறுபவரிடமிருந்து கடன் கணக்கை மாற்றுவதற்கான கோரிக்கை பெறப்பட்டால், நிறுவனத்தின் ஒப்புதல் அல்லது வேறுவிதமாக நிறுவனத்தின் ஆட்சேபனை, ஏதேனும் இருந்தால், கோரிக்கை பெறப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குள் தெரிவிக்கப்படவேண்டும். அத்தகைய மாற்றம் சட்டத்திற்கு உட்பட்டு வெளிப்படையான ஒப்பந்த விதிமுறைகளின்படி இருக்க வேண்டும்.

(c) கடன்களை வசூலிக்கும் விஷயத்தில், பல ஆண்டுகளாக அதன் கொள்கைக்கு இணங்க, நிறுவனம் தேவையற்ற துன்புறுத்தலை, அதாவது ஒவ்வாத நேரங்களில் (காலை 8:00 மணிக்கு முன், மாலை 7:00 மணிக்குப் பிறகு) கடன் வாங்குபவர்களைத் தொந்தரவு செய்வது, கடனைத் திரும்பப் பெறுவதற்கு ஆட்பலத்தினை பயன்படுத்துதல் போன்றவற்றினை செய்யக்கூடாது. வாடிக்கையாளர்களுடன் தகுந்த முறையில் நடந்து கொள்ள நிறுவனத்தின் ஊழியர்களுக்கு போதுமான பயிற்சியளிக்க பட்டுள்ளது (வாடிக்கையாளர்களிடம் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளாதது உட்பட). ரிசர்வ் வங்கியின் எண். RBI/2008- 09/454 DNBS (PD) CC எண். 139/03.10.001/2008-09, 24 ஏப்ரல் 2009தேதியிட்ட சுற்றறிக்கையின்படி

திரும்பப் பெறுதல் விதி கடன் வாங்குபவருடனான ஒப்பந்தம் /கடன் ஒப்பந்தத்தில் கண்டிப்பாக இடம்பெறுதல் வேண்டும்.

(d) கடன்கள் மற்றும் அட்வான்ச்கள் வழிகாட்டுதல்களுக்கான (DOR.STR.REC. 13/13.03.00 / 2024 - 25) RBI முக்கிய உண்மைகள் அறிக்கையின் (KFS) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்தை நிவைவேற்றும் முன் அனைத்து வருங்கால கடன் வாங்குபவர்களுக்கும் வழங்கப்படும். KFS முக்கிய உண்மை அறிக்கை கடன் வாங்குபவர்களுக்குப் புரியும் மொழியில் எழுதப்படும், மற்றும் KFS இன் உள்ளடக்கங்கள் கடன் வாங்குபவர்களுக்கு விளக்கப்படும். அவர்கள் அதை புரிந்துகொண்டதற்கான ஒப்புதலைப் பெற வேண்டும்.

(e) ஆண்டு சதவீத விகிதத்திற்கான (APR) கணக்கீட்டுத் தால் KFS மற்றும் பணமதிப்பிழப்பு அட்டவணை கடன் தவணைக்காலத்தின் மீதான கடனின் தேய்மான அட்டவணை ஆகியவற்றுடன் சேர்க்கப்படும். நிறுவனத்தால் விதிக்கப்படும் அனைத்து கட்டணங்களையும் APR உள்ளடக்கும்.

***(VI) குறைகள்:***

நிறுவனத்தின் செயல்பாட்டாளர்களின் முடிவுகளால் எழும் தகராறுகள் அடுத்த உயர் மட்டத்தில் தீர்க்கப்படுவதை உறுதி செய்வதற்காக இயக்குநர்கள் குழு பொருத்தமான குறை தீர்க்கும் பொறிமுறையை வகுத்துள்ளது.

நவம்பர் 9, 2017 தேதியிட்ட சுற்றறிக்கையின்படி வெளியிடப்பட்ட மற்றோரை பணிக்கும் ஏற்பாடுகள் குறித்த RBI வழிகாட்டுதல்களைக் குறிப்பிட்டு, இந்த குறை தீர்க்கும் பொறிமுறையானது மற்றோரை பணிக்கும் ஏற்பாடுகள் தொடர்பாக பெறப்பட்ட புகார்களையும் உள்ளடக்கியது.

நிர்வாகத்தின் பல்வேறு நிலைகளில் நியாயமான நடைமுறைச் சட்டத்தின் இணக்கம் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொறிமுறையின் செயல்பாடு குறித்து அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படும். அத்தகைய மதிப்பாய்வுகளின் ஒருங்கிணைந்த அறிக்கை வழக்கமான இடைவெளியில் வாரியத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

**குறை தீர்க்கும் அலுவலர்**
**திரு. சரண்தீப் சிங் சாவ்லா**, 02.09.2022 அன்று வெளியிடப்பட்ட நியாயமான நடைமுறைகள் குறியீடு மற்றும் டிஜிட்டல் கடன் வழிகாட்டுதல்களின் கீழ் குறை தீர்க்கும் அதிகாரியாக (GRO) நியமிக்கப்பட்டுள்ளார். தொடர்பு விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது;

**மொபைல்: 91 7305963580**
**மின்னஞ்சல் முகவரி: gro@tvscredit.com**

ஒரு மாத காலத்திற்குள் புகார் / தகராறு தீர்க்கப்படாவிட்டால், நிறுவனத்தின் பதிவு அலுவலகம் அதிகார வரம்பிற்கு உட்பட்ட வாடிக்கையாளர் வங்கி அல்லாத மேற்பார்வை துறையின் (DNBS) பிராந்திய அலுவலகத்தின் அதிகாரியிடம், இந்திய ரிசர்வ் வங்கி, ஃபோர்ட் கிளாசிஸ், ராஜாஜி சாலை,

சென்னை 600 001, தமிழ்நாடு, தொலைபேசி: 044 25393406, என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

எங்கள் வாடிக்கையாளர்களின் நலனுக்காக, "குறைகள்" பற்றிய மேற்கண்ட தகவல்கள் எங்கள் கிளைகள் / வணிகம் நடைபெறும் இடங்களில் வெளிப்படுத்தப்படும்.

***(VII) இணையதளத்தில் வெளியிடுதல்***

நியாயமான நடைமுறைகள் குறியீடு, முதன்மையாக உள்ளூர் மொழியில் அல்லது கடன் வாங்குபவர் புரிந்து கொள்கிற மொழியில் பல்வேறு பங்குதாரர்களின் தகவலுக்காக நிறுவனத்தின் இணையதளத்தில் வைக்கப்பட வேண்டும்.

***(VIII) விதிக்கப்படும் அதிகப்படியான வட்டி விகிதத்தை ஒழுங்குபடுத்துதல்:***

நிறுவனம் அவ்வப்போது அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு ஏற்ப வட்டி விகிதங்கள் மற்றும் செயலாக்கம் மற்றும் பிற கட்டணங்களை நிர்ணயிப்பதில் பொருத்தமான உள் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, இணையதளத்தில் காட்டப்பட்டுள்ள வட்டி விகித மாதிரியை நிறுவனம் பின்பற்ற வேண்டும். வட்டி விகிதம் பல்வேறு வகையான கடன் வாங்குபவர்களுக்கு வெவ்வேறு வட்டி விகிதங்களை வசூலிப்பதற்கான ஆபத்து மற்றும் காரணங்களின் தரநிலைகளுக்கான அணுகுமுறை போன்றவை விண்ணப்பப் படிவத்தில் வெளியிடப்பட்டு, கடன் அனுமதி கடிதத்தில் வெளிப்படையாகத் தெரிவிக்கப்படும்.

வட்டி விகிதம் வருடாந்திர விகிதங்களாக இருக்க வேண்டும், இதனால் கடன் வாங்கியவர் கணக்கில் வசூலிக்கப்படும் சரியான விகிதங்களை அறிந்து கொள்ள முடியும்.

***(IX) நிறுவனத்தால் நிதியளிக்கப்பட்ட வாகனங்களை திரும்பப் பெறுதல்:***

கடன் வாங்குபவருடனான கடன் ஒப்பந்தத்தில் உள்ளமைக்கப்பட்ட மறு உடைமை விதியை நிறுவனம் சேர்த்து சட்டப்பூர்வமாக செயல்படுத்தப்படுகிறது. வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்த, கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இது தொடர்பான விதிகளையும் கொண்டுள்ளது:

(a) a.உடைமை எடுப்பதற்கு முன் அறிவிப்பு காலம்;

(b) b.அறிவிப்பு காலம் தள்ளுபடி செய்யப்படும் சூழ்நிலைகள்;

(c) c.பிணையை கையகப்படுத்துவதற்கான நடைமுறை

(d) d.சொத்து விற்பனை / ஏலத்திற்கு முன் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு கடன் வாங்குபவருக்கு வழங்கப்படும் இறுதி வாய்ப்பு தொடர்பான ஏற்பாடு;

(e) e. கடன் வாங்குபவருக்கு மீண்டும் உரிமை வழங்குவதற்கான நடைமுறை மற்றும்

(f) சொத்து விற்பனை / ஏலத்திற்கான நடைமுறை.

(g) f. அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் நகல் கடன் வாங்குபவர்களுக்குக் கிடைக்கும்.

***(X) டிஜிட்டல் கடன் வழங்கும் தளங்கள் மூலம் பெறப்படும் கடன்கள்***

எங்கெல்லாம் தயாரிப்பு / வணிகக் குழு டிஜிட்டல் கடன் வழங்கும் தளங்களை முகவர்களாக கடன் வாங்குபவர்களுக்கு சேவை செய்யவோ அல்லது நிலுவைத் தொகையை வசூலிக்கவோ பயன்படுத்தும்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்:

(a) முகவர்களாக ஈடுபட்டுள்ள டிஜிட்டல் கடன் வழங்கும் தளங்களின் பெயர்கள் TVSCS இன் இணையதளத்தில் வெளியிடப்படும்.

(b) முகவர்களாக ஈடுபட்டுள்ள டிஜிட்டல் கடன் வழங்கும் தளங்கள் தங்களை TVSCS சார்பாக முன்கூட்டியே வாடிக்கையாளரை தொடர்பு கொண்டு வெளிப்படுத்துமாறு அறிவுறுத்தப்படும்.

(c) அனுமதியளித்த உடன் அதேசமயம் கடன் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு முன், அனுமதி கடிதம் TVSCS இன் லெட்டர் ஹெட்டில் கடன் வாங்குபவருக்கு வழங்கப்படும்.

(d) கடன் ஒப்பந்தத்தின் நகலுடன், கடன் ஒப்பந்தத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள அனைத்து இணைப்புகளின் நகலையும், கடனை அனுமதிக்கும்/ வழங்கும் நேரத்தில் அனைத்து கடன் வாங்குபவர்களுக்கும் வழங்க வேண்டும்.

(e) தயாரிப்பு/வணிகக் குழுக்கள் அவர்களால் ஈடுபட்டுள்ள டிஜிட்டல் கடன் வழங்கும் தளங்களில் நல்ல பயன் அளிக்கக்கூடிய மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு உறுதிசெய்யப்படும்.

(f) குறை தீர்க்கும் பொறிமுறை பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதற்கு போதுமான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

(g) கூலிங் ஆஃப்/லுக் அப் காலம்: இந்தக் காலக்கட்டத்தில் எந்த அபராதமும் இல்லாமல் அசல் மற்றும் விகிதாசார வருடாந்திர சதவீத விகிதத்தை (APR) செலுத்தி டிஜிட்டல் கடனில் இருந்து வெளியேற வாடிக்கையாளருக்கு வெளிப்படையான விருப்பம் வழங்கப்படும். இந்த கூலிங் ஆஃப்/லுக் அப் காலம், வாடிக்கையாளருக்கு பணம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 3 நாட்களுக்கு வழங்கப்படும்.

மேலே உள்ள விதிகள் தயாரிப்பு/வணிகக் குழுக்களால் முறையாக உறுதிசெய்யப்படும்.

**(XI) மைக்ரோஃபைனான்ஸ் வாடிக்கையாளர்களுக்கு கடன்கள்**

மைக்ரோ பைனான்ஸ் வாடிக்கையாளர்களுக்கு கடன்கள் வழங்கும் போது பின்வரும் வழிமுறைகளுக்கு இணங்க வேண்டும்;

(a) FPC, நிறுவனத்தின் அனைத்து அலுவலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். கடன்வாங்கியவரின் வேண்டுகோளுக்கு இணங்க, கடன் வாங்கியவரால் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் (FPC) வழங்கப்பட வேண்டும்.

(b) பணம் வாங்குபவரால் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் மைக்ரோ பைனான்ஸ் கடன்களுக்கான நிலையான கடன் ஒப்பந்தம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

(c) கடன் வாங்குபவருக்கு பின்வரும் விவரங்கள் அடங்கிய கடன் அட்டை வழங்கப்பட வேண்டும்:

i. கடன் வாங்குபவரை அடையாளம் காணும் வகையிலான போதுமான தகவல்கள்
ii. விலை நிர்ணயம் குறித்த எளிமையான உண்மைத் தாள்
iii. கடன் தொடர்பான அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
iv. தவணைத் தொகையையும் சேர்த்து அனைத்து திருப்பிச் செலுத்தப்பட்ட தொகைக்கும் இறுதித் தொகைக்கும் நிறுவனத்தால் உரிய ஒப்புதல் இரசீதுகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
v. நிறுவனத்தின் குறைதீர்க்கும் அதிகாரியின் பெயர் மற்றும் தொடர்பு எண் உட்பட இந்த அமைப்பு பற்றிய அனைத்து விவரங்களும் இடம் பெற்று இருக்க வேண்டும்.
vi. கடன் அல்லாத பிற ப்ராடக்ட்களை பொருள்களை வழங்கும் போது கடன் வாங்குபவர்களின் முழு சம்மதத்துடன் வழங்க வேண்டும் மற்றும் இது போன்ற ப்ராடக்ட்களுக்கான கட்டண விவரங்களை கடன் அட்டையிலேயே வெளிப்படையாக கடன் வாங்குபவர்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்.

கூலிங் ஆஃப்/ லுக் அப் காலம்: பணம் வழங்கப்பட்ட தேதியில் இருந்து குறைந்தபட்சம் 3 நாட்கள் கூலிங் ஆஃப் / லுக் அப் காலத்தில் எந்தவொரு அபராதமும் இல்லாமல் அசல் மற்றும் விகிதாசார வருடாந்திர சதவீத விகிதத்தை செலுத்துவதன் மூலம் டிஜிட்டல் கடனில் இருந்து வெளியேற வாடிக்கையாளருக்கு ஒரு வெளிப்படையான விருப்பம் வழங்கப்படும்.

கடன் அட்டையில் உள்ள அனைத்து தகவல்களும் கடன் வாங்குபவருக்கு புரியும் மொழியில் இருக்க வேண்டும் மற்றும் சட்டக் குழுவால் முறையாக சரி பார்க்கப்பட்டு இருக்க வேண்டும்.

(d) நிறுவனம், தன் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த நிறுவனப் பணியாளர்களின் முறையற்ற நடத்தைக்கு பொறுப்பஏற்க வேண்டும் என்றும், உரிய நேரத்தில் தன வாடிக்கையாளர்களின் குறைகளைத் தீர்க்க வேண்டும் என்றும் இதன் மூலம் அறிவிக்கிறது. இந்த உறுதியளித்தல், மைக்ரோ பைனான்ஸ் வாடிக்கையாளர்களுக்கான

TVS CREDIT

கடன் ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ளதை சட்டக் குழு உறுதி செய்ய வேண்டும்.

(e) வசூலிக்கும் குழு மற்றும் வாடிக்கையாளர் சேவைக் குழு போன்றவை வாடிக்கையாளர்கள் கடன் திருப்பி செலுத்துதல் தொடர்பாக சந்திக்கும் பிரச்சனைகளை அடையாளம் காணும் அல்லது உதவும் அமைப்பாக இருப்பதுடன், இது போன்ற கடன் வாங்கியவர்களுடன் தொடர்பு கொள்ளுதல் மற்றும் அவர்களுக்கு அடமானம் வைக்கப்பட்ட பொருட்களை மீட்பதற்கான உரிமைகள் குறித்த உரிய வழிகாட்டுதல்களை வழங்கும் அமைப்பாகவும் இருக்கிறது.

(f) கடன் வாங்கியவர் மற்றும் நிறுவனத்தால் பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட/பொதுவான இடத்தில் பணத்தை திரும்ப வசூலிக்கலாம். எனினும், இரண்டிற்கும் மேற்பட்ட முறையோ அல்லது தொடர்ந்தோ குறிப்பிட்ட/பொதுவான இடத்திற்கு கடன் வாங்கியவர் வரத் தவறினால், களப் பணியாளர் கடன் வாங்கியவரின் வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ கடனை வசூலிக்க அனுமதிக்கப்படுவார்.

(g) வசூல்/அபாயக் கட்டுப்பாட்டுப் பிரிவு (ஆர்சியு) தங்களால் பணியமர்த்தப்படும் பண மீட்பு முகவர்கள் தங்கள் பணியாளர்களின் முன்நடத்தைகளைச் சரிபார்ப்பதை உறுதி செய்ய வேண்டும். இதில் காவல்துறை மூலம் சரிபார்த்தலும் அடங்கும். ஒவ்வொரு முறை ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும் போதும், மீண்டும் பண மீட்பு முகவர்களின் முன்நடத்தை சரிபார்ப்பு செய்யப்படுவதை வசூல்/அபாயக் கட்டுப்பாட்டுப் பிரிவு (ஆர்சியு) உறுதி செய்ய வேண்டும்.

(h) மேற்கண்ட புள்ளி IV (c)- யில் குறிப்பிட்டுள்ளபடி பண வசூலின் போது வசூலிக்கும் பணியாளர்களோ அல்லது பண மீட்பு முகவர்களோ கடுமையான வழிமுறைகளைப் பயன்படுத்தக் கூடாது. மேலும் மைக்ரோ பைனான்ஸ் வாடிக்கையாளர்களைத் தொடர்பு கொள்வதற்கான நேரம் காலை 09:00 முதல் மாலை 6:00 மணிக்குள் இருக்க வேண்டும் என்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(i) கடனை வசூலிப்பது தொடர்பான குறை தீர்க்கும் செயல்முறைகள், கடன் வாங்கியவருக்கு கடன் வழங்கும் போது தரப்படும். கடன் ஒப்பந்தத்தில் விவரங்கள் முறையாகப் பதிவு செய்யப்பட்டதை சட்டக் குழு உறுதி செய்யும்.

(j) உரிய அறிவிப்பு மற்றும் அங்கீகாரத்தை உறுதி செய்வதற்காக வசூல் செய்யும் குழு பண மீட்பு செயல்முறையைத் தொடங்கும் முன் பண மீட்பு முகவரின் விவரங்களை கடன் வாங்கியவருக்கு வழங்க வேண்டும்.

(k) பண மீட்பு முகவர் தன்னுடன் நிறுவனத்தால் வழங்கப்பட்ட அறிவிப்பு மற்றும் நிறுவனம் அல்லது முகமையால் வழங்கப்பட்ட அடையாள அட்டையுடன், அங்கீகாரக் கடிதத்தையும் எடுத்துச் செல்ல வேண்டும். அறிவிப்பு மற்றும் அங்கீகாரக் கடிதத்தில் பிற விவரங்களுடன் நிறுவனம் மற்றும் பண மீட்பு முகமையை தொடர்பு கொள்ளும் விவரங்கள் இடம் பெற வேண்டும்.

(l) பண மீட்பு செயல்முறையின் போது பண மீட்பு முகமை கடன் வழங்கும் நிறுவனத்தால் மாற்றப்பட்டால்,

   i. வசூலிக்கும் குழு இந்த மாற்றம் குறித்து கடன் வாங்கியவருக்கு தெரிவிக்க வேண்டும்.
   ii. புதிய முகவர் அறிவிப்பு மற்றும் தன் அடையாள அட்டையுடன் அங்கீகாரக் கடிதத்தையும் கொண்டு செல்ல வேண்டும்.

அறிவிப்பு மற்றும் அங்கீகாரக் கடிதத்தில் பிற விவரங்களுடன் பண மீட்பு முகமை மற்றும் நிறுவனத்தின் தொடர்பு விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
வசூல் செய்யும் குழு, நிறுவனத்தால் ஈடுபடுத்தப்பட்டுள்ள கடன் மீட்பு முகமைகளின் அனைத்து சமீபத்தைய விவரங்கள் நிறுவன இணையதளத்தில் முறையாக இடம்பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

(m) கடன் வாங்குபவரின் தேவைக்கு ஏற்ப (மாதந்தோறும் கூடுதலாக , வாரந்தோறும், இரு வாரங்களுக்கு ஒரு முறை) என கடனை திருப்பிச் செலுத்தும் காலம் வழங்கப்படும்

***(XII) தங்க நகைகளின் அடமானத்திற்கு எதிராகக் கடன் வழங்குதல்***

தங்கம் மற்றும் ஏலக் கொள்கைக்கு எதிராகக் கடன் வழங்குவதற்கான வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை அவ்வப்போது ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களை உள்ளடக்கியதாக இருக்கும்.
கீழேயுள்ள ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றவற்றுடன் முறையாக உறுதி செய்யப்படும்;

(a) ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கேஒய்சி வழிகாட்டுதல்களுக்கான இணக்கத்தை உறுதிசெய்வதற்கான போதுமான நடவடிக்கைகள் மற்றும் எந்தவொரு கடனையும் நீட்டிப்பதற்கு முன்னர் வாடிக்கையாளர் மீது போதுமான விடாமுயற்சி மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்கிறது.
(b) பெறப்பட்ட நகைகளுக்கான சரியான மதிப்பீட்டு நடைமுறை.
(c) தங்க நகைகளின் உரிமையை பூர்த்தி செய்வதற்கான உள் அமைப்புகள்.
(d) நகைகளை பாதுகாப்பான காவலில் வைப்பதற்கான போதுமான அமைப்புகள், தொடர்ச்சியான அடிப்படையில் அமைப்புகளை மறுஆய்வு செய்தல், சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் நடைமுறைகள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக உள் தணிக்கையாளர்கள் மூலம் அவ்வப்போது ஆய்வுகளை மேற்கொள்ளுதல். நகைகளை சேமிக்க பொருத்தமான வசதி இல்லாத கிளைகள் தங்கத்தின் அடமானத்திற்கு எதிரான கடன்களை வழங்கக்கூடாது.
(e) அடமானமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நகைகள் சரியான முறையில் காப்பீடு செய்யப்பட வேண்டும்.
(f) கடன் வாங்குபவருக்கு போதுமான முன் அறிவிப்போடு திருப்பிச் செலுத்தாத நிலையில் வெளிப்படையான ஏல நடைமுறை. ஆர்வத்தில் முரண்பாடுகள் இருக்காது மற்றும் குழு நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் உட்பட ஏலத்தின் போது அனைத்து பரிவர்த்தனைகளிலும் ARM இன் நீள உறவு இருப்பதை ஏல செயல்முறை உறுதி செய்ய வேண்டும்.
(g) குறைந்தது 2 செய்தித்தாள்களில் விளம்பரங்களை வெளியிடுவதன் மூலம் ஏலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும், ஒன்று பேச்சுவழக்கு மொழியிலும் மற்றொன்று தேசிய நாளிதழிலும்.
(h) நடைபெற்ற ஏலங்களில் TVSCS பங்கேற்காது.
(i) அடகு வைக்கப்பட்ட தங்கம் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏலதாரர்கள் மூலம் மட்டுமே ஏலம் விடப்படும்.
(j) ஒன்றிணைத்தல், நிறைவேற்றுதல் மற்றும் ஒப்புதல் ஆகிய கடமைகளைப் பிரித்தல் உள்ளிட்ட மோசடிகளைக் கையாள்வதற்காக அமைக்கப்பட

வேண்டிய அமைப்புகள் மற்றும் நடைமுறைகளையும் இந்தக் கொள்கை உள்ளடக்கும்.

***(XIII) கொள்கையின் மதிப்பாய்வு***

இந்தக் கொள்கையை அவ்வப்போது திருத்துவதற்கான உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது. இந்தக் கொள்கை அத்தகைய இடைவெளியில் (ஆனால் குறைந்தபட்சம் வருடாந்திர அடிப்படையில்) மதிப்பாய்வு செய்யப்படும், ஏனெனில் இடர் மேலாண்மைக் குழு அவசியமாகக் கருதலாம் மற்றும் கொள்கையில் ஏதேனும் மாற்றங்கள் இடர் மேலாண்மைக் குழுவால் அங்கீகரிக்கப்படும்.

***************************************